

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (3-8-2025) நாடகம், இசை , திரைத்துறை என்று பல் துறை களிலும் அரை நூற்றாண்டுக்கு மேலாக பிரகாசித்த மதன்பாப் மறைவையொட்டி அவரது இல்லத்திற்குச் சென்று அவரது திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (3825) திராவிட இயக்க தலைவர்களில் ஒருவரான மறைந்த நாவலர். இரா. நெடுஞ்செழியன் அவர்களின் மகன் மதிவாணன் அவர்களின் மறைவையொட்டி அவரது திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்

### பயணிகள் வசதிக்காக

# அதிக வழித்தடங்களில் வந்தே பாரத் ரயில் இயக்கப்படுமா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 4 –

ரயில் பயணிகள் வசதிக்காக அதிக வழித்தடங்களில் வந்தே பாரத் ரயில் இயக்கப்படுமா என்று வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

வந்தே பாரத் ரயில்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி.. கேள்வி எழுப்பினார். அது வருமாறு

நாடு முழுவதும் தற்போது இயக்கப்படும் வந்தே பாரத் ரயில்களின் முக்கிய அம்சங்கள் மற்றும் வழித்தடங்களின் எண்ணிக்கையின் விவரங்கள் யாவை? ரயில் பயணிகளின் நலனுக்காக அதிக ரயில் வழித்தடங்களில் வந்தே பாரத் ரயில்களை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா? அப்படியானால்> அதன் விவரங்கள் தருக?

வரும் ஆண்டுகளில் இயக்கப்பட உள்ள இதுபோன்ற மேலும் ரயில்களின் விவரங்கள் யாவை? நாடு முழுவதும் கூறப்பட்ட ரயில்களின் ஒட்டுமொத்த பயன்பாட்டின் விவரங்கள் தருக?

கூறப்பட்ட ரயில்களின் செயல்திறன் அனைத்து வழித்தடங்களிலும் சிறப்பாக உள்ளதா? அப்படியானால்> அதன் விவரங்கள் யாவை? நாட்டில் ஏழை, அடித்தட்டு நடுத்தர மக்களின் நலனுக்காக வந்தே பாரத் ரயில்களில் டிக்கெட் கட்டணத்தைக் குறைக்க ஒன்றிய அரசுக்கு ஏதேனும்

உத்தேசம் உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால்> அதற்கான காரணங்கள்; ஏழை அடித்தட்டு நடுத்தர மற்றும் நடுத்தர வர்க்க மக்களுக்கு மலிவு விலையில் ரயில் பயணத்தை வழங்க ஒன்றிய அரசு முன்மொழி கிறதா? அப்படியானால், இது சம்பந்தமாக தமிழ் நாடு தொடர்பான விவரங்கள் மற்றும் இது தொடர்பாக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி கள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் ,ரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்:

ரயில் பயணிகளுக்கு சிறந்த பயண அனுபவத்தை வழங்கும் நோக்கில், இந்திய ரயில்வே நவீன பெட்டிகள்> மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பயணிகள் வசதிகளுடன் உள்நாட்டி லேயே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட வந்தே பாரத் ரயில்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த புதிய வந்தே பாரத் ரயில்கள் பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளன:

I. கவாச் பொருத்தப்பட்டுள்ளது. II. 180/160 KMPH வேகத்தில் இயங்கும் வடிவமைப்பு/இயக்க வேகத்துடன் அதிக முடுக்கம். உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட UVC விளக்கு அடிப்படையிலான கிருமிநாசினி அமைப்புடன் கூடிய ஏர் கண்டிஷனிங் அலகுகள்.

IV. ஜெர்க் இல்லாத அரைநிரந்தர இணைப்புகள்.

V. மையமாகக் கட்டுப்படுத்தப்படும் தானியங்கி பிளக் கதவுகள் மற்றும் முழுமையாக சீல் செய்யப்பட்ட அகலமான கேங்வேக்கள்.

VI. சிறந்த சவாரி வசதி.

VII. அனைத்து ரயில் பெட்டிகளிலும் சிசிடிவி கள்.

VIII. அனைத்து பெட்டிகளிலும் அவசர எச்சரிக்கை புஷ் பொத்தான்கள் மற்றும் திருப்பி பேசும் வசதி டாக்பேக் யூனிட்கள்.

IX. மின்சார பெட்டிகள் மற்றும் கழிப்பறைகளில் மேம்படுத்தப்பட்ட தீ பாதுகாப்பு ஏரோசல் அடிப்படையிலான தீ கண்டறிதல் மற்றும் அடக்கும் அமைப்பு.

X. மாற்றுத்திறனாளி பயணிகளுக்கு ஒவ்வொரு முனையிலும் ஓட்டுநர் பெட்டிகளில் சிறப்பு கழிப்பறை.

XI. குரல் பதிவு வசதி மற்றும் விபத்து கடினப்படுத்தப்பட்ட நினைவகத்து டன் கூடிய ஓட்டுநர்காவலர் தொடர்பு.

XII. தொலைதூர கண்காணிப்புடன் கூடிய பெட்டி நிலை கண்காணிப்பு அமைப்பு (CCMS) காட்சி.

மேலும், இந்திய ரயில்வே நீண்ட மற்றும் நடுத்தர பயணங்களுக்கான வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில்களைத் திட்ட மிட்டுள்ளது. சென்னை ஐ.சி. எஃப்ல் மொத்தம் 60 ரேக்குகள் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கூடுதலாக, 200 வந்தே பாரத் ஸ்லீப்பர் ரேக்குகளை தயாரிப்பதற்கான ஒப்பந்தங்களும் தொழில்நுட்ப கூட்டா ளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில்களில் வழங்கப்ப டும் பரந்த தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் பின்வருமாறு:

I. KAVACH பொருத்தப்பட்டவை.

II. விபத்துக்குள்ளான மற்றும் ஜெர்க் இல்லாத அரை நிரந்தர இணைப்பிகள் மற்றும் எதிர்ப்பு ஏறுபவர்கள்.

III. EN தரநிலைகளுக்கு இணங்க கார்பாடி விபத்துக்குள்ளான வடிவமைப்பு.

IV. EN45545 HL3 தீ பாதுகாப்பு தரநிலைகள்.

V. ஒவ்வொரு பெட்டியின் முடிவிலும் தீ தடுப்பு கதவுகள்.

VI. ஆற்றல் செயல்திறனுக்கான மீளுருவாக்கம் பிரேக்கிங் அமைப்பு.

VII. உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட UVC விளக்கு அடிப்படையிலான கிருமிநாசினி அமைப்புடன் ஏர் கண்டிஷனிங் அலகுகள் வழங்கப்பட்டுள்ளன.

VIII. அவசரகாலத்தில் பயணிகள் மற்றும் ரயில் மேலாளர்/லோகோ பைலட் இடையே தொடர்பு கொள்வதற்கான அவசர பேச்சுபின்னணி அலகு.

IX.மேல் பெர்த்களில் ஏறுவதை எளிதாக்குவதற்காக பணிச்சூழலியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட ஏணி.

,ரயில்வே நெட்வொர்க் மாநில எல்லைகளுக்கு அப்பால் விரிவடைவதால்> நெட்வொர்க் தேவைக்கேற்ப, அத்தகைய எல்லைகளுக்கு அப்பால் ரயில்கள் அறிமுகப் படுத்தப் படுகின்றன.

தற்போது, இந்திய ரயில்வே (IR) நெட்வொர்க்கில் 144 வந்தே பாரத் ரயில் சேவைகள் தொடக்க/நிறுத்த அடிப்படையில் இயக்கப்படுகின்றன. தவிர, வந்தே பாரத் ரயில் சேவைகள் உட்பட புதிய ரயில் சேவைகளை அறிமுகப்படுத்துவது> போக்குவரத்து நியாயப்படுத்தல்> செயல்பாட்டு சாத்தியக்கூறு> வள கிடைக்கும் தன்மை போன்றவற்றுக்கு உட்பட்டு இந்திய ரயில்வேயில் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும்.

202425 & 202526 நிதியாண்டில் (ஜூன், 2025 வரை) வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களின் ஒட்டுமொத்த பயன்பாடு சதவீதம் முறையே 102.01% & 105.03% ஆகும். இந்திய ரயில்வே 720 கோடிக்கும் அதிகமான பயணியர் டிக்கெட்கள் மலிவு விலையில் போக்குவரத்து சேவையை வழங்குகிறது. அண்டை நாடுகளுடன் ஒப்பிடும்போது கூட> இந்திய ரயில்வேயின் கட்டணங்கள் உலகிலேயே மிகக் குறைவு.

மானியம்: 202324 நிதியாண்டில் பயணிகள் பயணத்திற்கு வழங்கப்படும் மொத்த மானியத் தொகை தற்காலிகமாக ரூ. 60>466 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது பயணிகள் பயணச் செலவில் 45% மானியமாகும்.

இவ்வாறு அவர் பதில் அளித்தார்.



நடிகர் மதன் பாப் உடலுக்கு தென்னிந்திய நடிகர் சங்க தலைவர் எம். நாசர், துணைத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சங்ககிரி வி. முத்து**
**ஆகஸ்ட் 4 (2016)**



**சங்ககிரி பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.**

**ஒன்றுபட்ட சேலம் மாவட்ட பிரதிநிதியாகவும் – மாவட்ட துணைச் செயலாளராகவும் – நாமக்கல் மாவட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1971, 1996 ஆகிய இரண்டு முறை சங்ககிரி தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### உணவு பதப்படுத்தும் தொழில்களை ஆதரிப்பதற்காக

# ஒன்றிய அரசு புதிய மானியத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதா?

## மக்களவையில் அருண் நேரு கேள்வி!



புதுடெல்லி, ஆக.4-

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு எம்.பி பேசியதாவது:

நுண், சிறு, நடுத்தர மற்றும் பெரிய அலகுகள் உட்பட பல்வேறு அளவிலான உணவு பதப்படுத்தும் தொழில்களை (எப்.பி.ஐ.) ஆதரிப்பதற்காக அரசாங்கம் புதிய மானியத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள், குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்க ளுக்கு இந்தத் திட்டங்களின் மொத்த ஒதுக்கீடு மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்;

அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கும் பழங்கள், காய்கறிகள் மற்றும் அழுகக்கூடிய பொருட்களின் அடுக்கு ஆயுளை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் எடுத்த குறிப்பிட்ட நடவடிக்கைகள்;

வேர்ல்ட் ஃபுட் இந்தியா போன்ற நிகழ்வுகள் மூலம் முதலீடு மற்றும் உலகளாவிய கவனத்தை அதிகரிக்க அரசாங்கம் முயற்சிகளை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும் மதிப்பு கூட்டலை மேம்படுத்துதல், உணவு வீணாவதைக் குறைத்தல் மற்றும் இந்தியாவை ஒரு முன்னணி உணவு பதப்படுத்தும் இடமாக ஊக்குவித்தல் ஆகியவற்றை இந்தத் திட்டங்கள் எவ்வாறு நோக்கமாகக் கொண்டுள்ளன?

இதற்கு உணவு பதப்படுத்தும் தொழில்கள் துறை அமைச்சர் பதிலளிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவிப்பு!



திருவள்ளூர் ஆக 04;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் கழக துணை பொதுச்செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி, தமிழ்நாடுசிறுபான்மையினர்நலன்மற்றும்வெளிநாடு வாழ்தமிழர்நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆகியோர் ஆலோசனைப்படி நாளை (05-08-2025 செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணி அளவில் மீஞ்சூர் ஒன்றியம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது

அதுசமய இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி..ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ இ.ஏ.பி. சிவாஜி, பி.ஜெ. மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு. கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல். ரவி, எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ. குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் செல்வராஜ் , கவி கணேசன், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ராபர்ட்ராஜதுரை, ஏ.கே. சுரேஷ், ஒன்றிய நகரபேரூர் கழக செயலாளர்கள் டி. கே.சந்திரசேகர், மு.மணி பாலன், கி.வே. ஆனந்தகுமார், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், ஜான் பொன்னுசாமி, ந.பரிமளம், கா.சு.ஜெகதீசன், மு.முரளிதரன், ஜி.ரவிக்குமார்,ஆ.ராஜா, ஏ.ஆர்.டி.உதயசூரியன், கி. வே.ஆனந்த் குமார், இரா. அறிவழகன், அபிராமிகுமரவேல், பி.முத்து, க.சு.தமிழ உதயன், ஆகியோர் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

பொருள் ஆகஸ்ட் 7ஆம் தேதி அன்றுகலைஞர் நினைவு நாளை முன்னிட்டு முதல்வர் தலைமையில் நடைபெறும் அமைதி பேரணியில் கலந்து கொள்வது குறித்துஎன மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் தெரிவித்துள்ளார்.

# சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் இன்று (04-08-2025 திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில், மாவட்டக் கழகம் அலுவலகம், எண்.20 / 32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது.

ஆகவே இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாள், கழக ஆக்கப் பணிகள்

**நே.சிற்றரசு**
செயலாளர் சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கினைப்பாளர் ஜானகிராமன் சமீபத்தில் ஏற்பட்ட உடல்நலக்குறைவால் மருத்துவ சிகிச்சைப் பெற்று வீடு திரும்பியதையடுத்து, மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ராமேஷ்ராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துனை செயலாளர் சி.எச்.சேகர், மாநில கொள்கைபரப்பு துனை செயலாளர் அன்புவாணன் , ராஜா , அலவி , சுதாகர் , நாரேஷ், ஜெயகுமார், சந்தோஷ் ,மற்றும் கழக உடன் பிறப்புகள், மிஞ்சூர் மெரட்டூர் ஊராட்சியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக

### இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத் தந்தை

# சேந்தமங்கலம் ஆர்.சிங்காரம் மறைவு!

## கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி, – அமைச்சர் மா.மதிவேந்தன், எம்.எல்.ஏக்கள், கழக நிர்வாகிகள் அஞ்சலி



நாமக்கல் ஆக 4

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத் தந்தையும், சேந்தமங்கலம் பேரூர் கழக அவைத் தலைவருமான ஆர்.சிங்காரம் நேற்று (03.08.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை இயற்கை எய்தினார்.

மறைந்த சிங்காரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றி உள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாட்டுடன் இருந்த அவர் தனது அரசு பணி ஓய்வுக்கு பிறகு சேந்தமங்கலம் பேரூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவைத் தலைவராக பொறுப்பேற்று கடந்த 15 ஆண்டுகளாக பணியாற்றி வந்துள்ளார். இவருக்கு விஜயா என்ற மனைவியும், அருண், விஸ்வநாத் என்ற இரு மகன்களும் உள்ளனர்.

இதில் இளைய மகன் விஸ்வநாத், நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளராக இருந்து வருகிறார்.

மறைந்த அன்னார் சிங்காரம் அவர்களுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ. ராமலிங்கம் கே.பொன்னுசாமி மற்றும் மாநில, மாவட்ட திமுக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்டோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதிக்குட்படட் செங்குன்றம் பேரூர் நாரவரி குப்பம் 14வது வார்டு சார்பில் அறிஞர் அண்ணா தெருவில் உள்ள சாய்பாபா கோவில் அருகில் மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனை பேரில் 14ஆவது வார்டு கவுன்சிலர் க.கு இலக்கியன் ஏற்பாட்டில் பொதுமக்களின் பாது காப்பை உறுதி செய்யும் விதமாக கண்காணிப்பு கேமராவை பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் விப்ரோநாராயணன கண்காணிப்பு கேமராவை துவக்கி வைத்தார் உடன் பேரூராட்சி மன்ற உறுப்பினர் கே.கே ராமன்,சுதாகர்,வார்டு உறுப்பினர் ஏ.எஸ். பார்த்தீபன், வார்டு செயலாளர் கே வாசுதேவன், ஜி.பூபதிசுரேஷ் , சினிவாசன்,மற்றும் ஜோதி பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.